<u>பொருள்கள்</u>

1. இந்நகராட்சிக்குட்பட்ட 31 சத்துணவு மையஙகளுக்கு Plug Point வைத்து மின்வசதி செய்து கொடுக்க கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 3/16300/2014, நாள். 18.07.2014–ன் படி மேற்கண்ட சத்துணவு மையஙகளுக்கு Plug Point மற்றும் மின்வசதி செய்து கொடுக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,000/–க்கு பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 20215 /2014/இ1

**தீர்மான எண் : 980 – அனுமதிக்கப்பட்டது**

2. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் குலாலர் தெரு, மற்றும் வடக்குத்தெருவில் உள்ள மழைநீர் வடிகால் ஓடை அருகில் தடுப்புச்சுவர் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 15054 /2014/இ1

**தீர்மான எண் : 981 – அவசரம் கருதி நகராட்சி நிதியில் செயல்படுத்தி அனுமதிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.45–ல் க.எண்.42B வரிவிதிப்பு எண்.73445 சொத்துவரி கேட்பு பதிவேட்டில் திருமதி. அஞ்சலால் பெயரில் அரையாண்டு சொத்து வரியாக ரூ.303/– உள்ளது. மேற்படி கட்டிடம் கட்டப்பட்டு கதவு எண்.42B என வரி விதிப்பு எண்.74712 அரையாண்டு வரியாக ரூ.12568/– 2009–10 II அரையாண்டு முதல் வரி நிர்ணயம் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது. ஆனால் பழைய வரி ரத்து செய்யப்படாமல் 2013–14 II அரையாண்டு வரையில் ரூ.3031/– நிலுவையாக உள்ளது. நிலுவைத் தொகையினை சம்பந்தப்பட்டோரிடம் இருந்து வசூல் செய்திட இயலாத காரணத்தால் வஜா செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– 2014–15 –ல் அரையாண்டிலிருந்து வரிவிதிப்பு (2009–10 முதுல் 2013–14 வரையிலான காலம்) ரத்து செய்யப்பட்டுள்ளது ரூ.3030/– யை வஜா செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 001750 /2014/அ9

**தீர்மான எண் : 982 – அனுமதிக்கப்பட்டது**

4. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24–ம் உள்ள மாவிளை தெற்கு தெருவில் போர்வெல் சின்டெக்ஸ் டேஙக் அமைக்க ரூ.4,85,000/– ரூபாய் நான்கு லெட்சத்து எண்பத்தி ஐந்தாயிரம்) செலவில் பணி மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி பெறப்பட்டது. எண்.3157 நாள்.02.09.2013 ஆனால் மேற்படி இடத்தில் பணி மேற்கொள்ள போதிய இடவசதி இல்லாதாலும் இப்பணியினை அதே வார்டுக்குட்பட்ட முருகன் கோவில் மேற்பக்கம் சானல் கரையில் போல்வெல் அமைத்தும் கோயிலடி சாலையில் பைப்பு லைன் மேற்கொள்ளவும் அதே மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 400 /13–14/இ2

**தீர்மான எண் : 983 – அனுமதிக்கப்பட்டது**

**5.** இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட 4 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல் பம்புசெட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.78,700/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | <u>**வார்டு எண் 24 பெருவிளை பள்ளவிளைரோடு (திருப்பு) போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் எண்.I**</u><br>10 குதிரை வேக சப்மெர்சிபிள் பம்புசெட் பழுது பார்த்து போர் பிளசிங செய்து, பழுதுபட்ட பைப்புகள், மோட்டார் கேபிள் மாற்றி பொறுத்தி இயக்குதல். | ரூ<br>38,350/— |
| II | <u>**வார்டு எண் 25 நெசவாளர் காலணி 4—ம் தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்**</u><br>3 குதிரை வேக "(4) " சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 12,100/— |
| III | <u>**வார்டு எண் 43 புதிய ஸ்டேட் பேங காலனி அடிசனல் புதிய போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்**</u><br>5 குதிரை வேகம் "(6) " சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 13,450/— |
| IV | <u>**வார்டு எண் 52 ஓல்டு ஸ்டேட் பேங காலனி போர் வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் (பிள்ளையார் கோவில் பக்கம்)**</u><br>5 குதிரை வேக "(6) " சப்மெர்சிபிள் பம்புசெட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 14,800/— |
| | <u>**மொத்தம்**</u> | 78,700/— |

<u>**அலுவலக குறிப்பு—**</u> அனுமதிக்கலாம்.

கோப்பு எண். /14/இ2

**தீர்மான எண் : 984 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

**6.** இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட 5 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல் பம்புசெட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.84,450/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | <u>**வார்டு எண் 5 வாத்தியார்விளை ரோடு (காவலர் குடியிருப்புக்கு எதிர்புறம்) போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் எண்.I**</u><br>5 குதிரை வேகம் "(6) " சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | ரூ<br>14,500/— |
| II | <u>**வார்டு எண் 19 வேதநகர் (சர்ச்க்கு பின்பக்கம்) போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்**</u><br>5 குதிரை வேக "(6) " சப்மெர்சிபிள் பம்புசெட் பழுது பார்த்து போர் பிளசிங செய்து, பழுதுபட்ட பைப்புகளை மாற்றி பம்பு டெலிவரி, அவுட்டர் பைப் சரி செய்து இயக்குதல். | 33,900/— |
| III | <u>**வார்டு எண் 39 கலைநகர் போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் (படிப்பகம் பக்கம்)**</u><br>5 குதிரை வேகம் "(6) " சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 14,050/— |

| | | |
|---|---|---|
| IV | **<u>வார்டு எண் 48 சாலை ரோடு (கேம்பு ரோடு) போர் வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் எண்.III</u>**<br>5 குதிரை வேக "(6) " சப்மெர்சிபிள் பம்புசெட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 13,600/– |
| V | **<u>வார்டு எண் 49 தட்டான்விளை போர் வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் (சுடுகாடு பக்கம்)</u>**<br>1,5 குதிரை வேக "(4) " சப்மெர்சிபிள் பம்புசெட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 8,400/– |

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் : 985 – அனுமதிக்கப்பட்டது**

7. இந்நகராட்சிக்கு சொந்தமான அணைபகுதியில் உள்ள Collections well பல ஆண்டுகளாக பராமரிக்கப்படாமல் உள்ளது. அதை துார்வாரி சுத்தம் செய்யவும், மற்றும் அணைக்கட்டுக்கு செல்லும் பகுதியிலுள்ள முட் செடிகளை அகற்றவும் மற்றும் முக்கடல் அணையிலிருந்து சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் 600mm, 800mm மெயின் குழாய் அறுகுவிளை ரயில்வே கிராஸ் பக்கமும் CSI பக்கமும், நாவல்காடு முக்கடல் ரோட்டில் (2–ம்) கிருஷ்ணன்கோவில் கழிப்பிடம் அருகில் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் பின்புறமும் பழுதை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத்தொகை ரூ.4,20,000/– குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற பார்வைக்கும் பதிவுக்கும்.
**<u>அலுவலககுறிப்பு</u>–** மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண். 20372 /2014/இ2

**தீர்மான எண் : 986 – மதிப்பீடு தொகை ரூ.4,50,000/– மற்றும் குடிநீர் அவசரம் கருதி நகராட்சி சட்டம் 15–ன் கீழ் செயலாக்கப்பட்டதை பதிவு செய்யலாம் என்ற திருத்தலுடன் அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சி சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.J.S.200 (பொக்லைன்) ஆயில் கசிவு பழுது பணிகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி ஜெயராஜ் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்திடம் பணி மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.6000/–க்கு மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி வைக்கப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு</u>–** 1. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வாகனம் எண். J.S.200 (பொக்லைன்)–க்கு பணி உத்தரவு ஜெயராஜ் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்திற்கு வழஙகியதை அனுமதிக்கலாம்.
2. ரூ.6000/– உத்தேச செலவினை அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 2081 /2012/எச்2

**தீர்மான எண் : 987 – அனுமதிக்கப்பட்டது**

9. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22–ல் உள்ள மேலச்சூரஙகுடி பிள்ளையார் கோயில்அருகே சிறுபாலம் அமைக்க ரூ.2,90,000/–க்கு மன்ற அனுமதி பெறப்பட்டது. அப்பகுதி மக்கள் அப்பாலத்தினை வாகன போக்குவரத்திற்கு ஏற்றதாக பெரிய அளவில் செய்து தருமாறு கோரியுள்ளதால் மேற்படி பணி மேற்கொள்ள ரூ.4,80,000/–க்கு (கூடுதல் தொகைக்கு) மன்ற அனுமதி கோரப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம். கோப்பு எண். 383 /13–14/இ1
**தீர்மான எண் : 988 – அனுமதிக்கப்பட்டது**

10. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு யானைக்கால் நோய் தடுப்பு திட்ட பிரிவில் முதிர்ந்த கொசுக்களை அழிக்க புகை அடிக்கும் இயந்திரங்கள் 14 எண்ணங்கள் நகராட்சியில் உள்ளது. அவற்றில் 10 எண்ணங்கள் சரியாக இயங்காத நிலையில் உள்ளது அவற்றை அத்தியாவசியமாக கருதி பழுது நீக்கம் செய்யவும் அதற்கான உத்தேச செலவு ரூபாய் 50,000/– (ஐம்பதாயிரம் ரூபாய்) ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி செய்யவும், மேற்படி பணிக்கு ஆகும் செலவீனத்திற்கும் மேற்படி பணி தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 989 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

11. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20–ல் பம்புரூம்கள், மின்மோட்டார் பாக்ஸ்கள், போர்வெல் அருகில் காங்கிரிட் தளம் மற்றும் குடிநீர் தொட்டிகளை சீரமைப்பு செய்ய உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,30,000 (இரண்டு லெட்சத்து முப்பதாயிரம்) –ல் குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 15632/2014/இ2

**தீர்மான எண் : 990 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

12. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30–ல் ராஜபாதை மற்றும் சோழராஜா கோவில் தெருவில் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,70,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம். கோப்பு எண். 19911/2014/இ2

**தீர்மான எண் : 991 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

13. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20–ல் C.T.M. Puram பகுதியில் போர்வெல் அமைத்தல் பணிக்கு 21.11.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

1. திரு. N. சபேசன் – 0.004% குறைவு

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.004% குறைவு ஒப்பந்தப்புள்ளிக்கு கோரிய ஒப்பந்தக்காரர் திரு. N. சபேசன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி கோரலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம். கோப்பு எண். 85/2014–15/இ2

**தீர்மான எண் : 992 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

14. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9–ல் போலீஸ் ஸ்டேசன் சாலை மற்றும் ஔவை சண்முகம் சாலையில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அருகில் தடுப்புச்சுவர் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.13,70,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 19114 /2014/இ1

**தீர்மான எண் : 993 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

15. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.42–ல் அன்பு தெருவில் பேவர் பிளாக் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9,50,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 19115 /2014/இ1

**தீர்மான எண் : 994 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

16. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18–ல் புதுத்தெரு, கச்சபுறதெரு, வையாலிவிளை தெருவில் மழைநீர் வடிகால் ஓடை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 20033 /2014/இ1

**தீர்மான எண் : 995 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

17. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18–ல் புதுத்தெருவில், மழைநீர் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.24,40,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 020094/2014/இ1

**தீர்மான எண் : 996 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

18. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18–ல் வெள்ளாளர் தெருவில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.21,30,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 20032/2014/இ1

**தீர்மான எண் : 997 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

19. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16–ல் ராமர் காலனி ஆறுமுகம் பிள்ளையார் கோவில் அருகில் உள்ள புதிய ரேசன் கடைக்கு எளிதாக செல்ல ஓடையின் மீது சிறுபாலம் அமைத்து ஒரு கேட்–டும், கவர்சிலாப் –ம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 19240/2014/இ1

**தீர்மான எண் : 998 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

20. இந்நகராட்சி அலுவலக வளாகத்தினுள் உள்ள நகராட்சியின் சுகாதார அதிகாரி அறை மற்றும் நகராட்சி பொறியாளர் அறைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9,80,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 019405/2014/இ1

**தீர்மான எண் : 999 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

21. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21–ல் வடக்கு சூரங்குடி தட்டான்விளை கிழக்கற்றத்தில் உள்ள பாழடைந்த பம்ப் ரூமை அகற்றி சாலை விரிவாக்கம் செய்து Premix Carpet அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6,70,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 020272/2014/இ1

**தீர்மான எண் : 1000 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

22. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவு கிருஷ்ணன் கோவில் நாய்கள் அறுவை சிகிட்சை மையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அருகில் உள்ள சுகாதார அலுவலர் அலுவலகம் பராமரிப்பு பணிகள் செய்யவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>– 1.** அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 20364/2014/இ1

**தீர்மான எண் : 1001 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

23. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6–ல் கைலாஷ் கார்டன் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.11,80,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 17693/2014/இ1

**தீர்மான எண் : 1002 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

24. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.51–ல் தளவாய்புரம் கோயில் முன்புறம் முதல் SPமற்றும் D.S.P ,இல்லம் வரை உள்ள சாலை மற்றும் மழைநீர் வடிகால் ஓடை பழுது அடைந்துள்ளதால் அதனை சரி செய்து தார் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.23,20,000/–க்கு பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 019374/2014/இ1

**தீர்மான எண் : 1003 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

25. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.37–ல் முருகன் சன்னிதி தெரு, பைத்துமால் நகர் பகுதியில் உள்ள சாலைகள் பழுது அடைந்துள்ளதால் மேற்படி சாலைகளில் பேவர்பிளாக் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.13,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 018441/2014/இ1

**தீர்மான எண் : 1004 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

26. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6–ல் காமராஜ் சாலை முதல் சன்னதி தெருவரை (ராஜா கல்யாண மண்டபம் அருகில்) C.B.H சாலை பழுதடைந்துள்ளதால் மேற்படி தெருவில் தார்பேட்ச் செய்து தார்தளம் புதுப்பிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8,80,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 17692/2014/இ1

**தீர்மான எண் : 1005 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

27. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.49—ல் கிருஷ்ணாதெரு, இராமசாமிதெரு, ஆகியவற்றில் பேவர்பிளாக் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.8,00,000/—க்கு நகர்மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. நகர்மன்ற தீர்மானம் எண்.1799 நாள். 20.12.2012—ன் படி வேலை உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. மேற்படி சாலையில் பாதாரள சாக்கடை திட்டம் நடைபெற வேண்டி உள்ளதால் இப்பணியை இதே மதிப்பீட்டில் துவாரகா தெரு, மற்றும் பாரதி நகரிலிருந்து தட்டான் விளை இடுகாடு செல்லும் சாலையில் கருந்தளம் அமைக்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>—** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 17692/2014/இ1

**தீர்மான எண் : 1006 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

28. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.49—ல் காமராஜ் நகர் மற்றும் தட்டான் விளை பார்க் ரோடு ஆகியவற்றில் உள்ள மழைநீர் வடிகால் ஓடை அமைக்க மதிப்பீடு ரூ.11,00,000/—க்கு 2011—12 விலை விகிதம் படி தயார் செய்யப்பட்டு மன்ற தீர்மானம் எண்.2105 நாள். 28.02.2013—ன் படி அனுமதி பெறப்பட்டது. தற்போது 2014—15 விலை விகிதம் படி ரூ.13,60,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>—** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 3292/2014/இ1

**தீர்மான எண் : 1007 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

29. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2—ல் மூன் லைட் ஜஙசன் 7A எதிர்தெரு, நெசவாளர் காலனி குறுக்குத்தெருக்கள், பரமார்த்தலிஙபுரம் தெருக்களில் தார்தளம் அமைக்கவும், சார்லஸ் தெருவில் பேவர்பிளாக் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.20,00,000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>—** அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 620441/2014/இ1

**தீர்மான எண் : 1008 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

30. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.42—ல் அன்பு தெருவில் புதிதாக போர்வெல் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,80,000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>—** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 19444/2014/இ2

**தீர்மான எண் : 1009 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

31. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17—ல் பட்டாரியார் தெருவில் அமைந்துள்ள பழுதுபட்ட நீர்த்தேக்க தொட்டியினை அகற்றி புதிதாக நீர்த்தேக்க தொட்டி அமைத்தும், புதிதாக போர் வெல் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,00,000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>—** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 018286/2014/இ2

**தீர்மான எண் : 1010 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

32. இந்நகராட்சியில் வடிவீஸ்வரம் 11—வது வார்டு மற்றும் 9—வது வார்டு, தெற்கு ரத வீதி, கீழரதவீதி, கல்மடத்தெரு, பறக்கின் கால் பண்ட் ரெயில்வே ரோடு, ஊட்டுவாழ் மடம் ரோடு, முத்தாரம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளுக்கு 4" 3" பகிர்மான குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி இடஙகளில் குடியிருப்புகளும், பகிர்மான குழாய்கள், வீட்டு குழாய் இணைப்புகளும் அதிகமாக உள்ளதாலும் ஏற்கனவே பதிக்கப்பட்டுள்ள குழாய்கள்

வழியாக தண்ணீர் அழுத்தமாக கிடைக்க கூடியதாக இல்லாதால் வீடுகளுக்கு அதிக அழுத்தமாக கிடைக்காமல் சிரமமாக உள்ளதால் கேப் ரோட்டிலுள்ள மெயின் பகிர்மான குழாயிலிருந்து இணைப்பு குழாய் அமைத்து குடிநீர் விநியோகத்தை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,20,000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 19445/2014/இ2

**தீர்மான எண் : 1011 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

33. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.51—ல் ஆதிமிக்கேல் தெருவில் கேலக்ஸி போர்வெல் அமைத்து மெயின் பைப்பில் இணைக்கவும், மேலும் Sintex tank அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,60,000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 019375/2014/இ2

**தீர்மான எண் : 1012 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

34. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30—ல் தளியபுரம் பூங்காவினுள் உள்ள போர்வெல் பழுதுபட்டுள்ளதால் அதனை சரி செய்து சின்டெக்ஸ்டேங்க் அமைத்து ஈழவர் தெரு மற்றும் சோழராஜா கோவில் தெருவுக்கு குடிநீர் விநியோகம் செய்ய போர்வெல் பிளசிங செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.80,000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>— 1) அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தலைவர் அவர்களின்முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 606610/2014/இ2

**தீர்மான எண் : 1013 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

35. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 சர்ச் தெருவில் போர்வெல் அமைத்தல் பணிக்கு2—வது முறையாக 21.11.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.
1. திரு. S.T. மணிகண்டன் — 0.001% குறைவு

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.001% குறைவு ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்தக்காரர் திரு. S.T. மணிகண்டன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி கோரலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>— அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் : 1014 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

36. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5—ல் உள்ள வாத்தியார்விளை வடக்குத்தெருவில் பேவர்பிளாக் தளம் அமைக்க மதிப்பீடு எண்.111/13—14 நகர்மன்ற தீர்மானம் எண்.1573—ன் படி மதிப்பீடு தொகை ரூ.9,20,000/—க்கு அனுமதிக்கப்பட்டது. தற்போது மேற்படி இடத்திற்கு பதிலாக வாத்தியார்விளை தெற்குத்தெரு, அம்மன்கோவில் குறுக்குத்தெரு மற்றும் மீன் கடை தெருக்களில் பேவர்பிளாக் அமைக்கவும், அதே மதிப்பீட்டுத்தொகைக்குள் பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 17424/2014/இ1

**தீர்மான எண் : 1015 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

37. இந்நகராட்சியின் நிலையான வழக்குறைஞர் (Standing Council) பதவி காலம் 20.07.2009 முடிய இருந்ததன் பேரில் புதிய வழக்குறைஞர் நியமனம் தொடர்பாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்ட நிலையில் இரு வழக்குறைஞர்களை நகராட்சி வழக்குறைஞர்களாக நியமனம் செய்திட நகர் மன்ற தீர்மானம் எண்.158 நாள்.25.09.2009–ல் மன்ற அனுமதி வழஙகப்பட்டிருந்தது.

நகராட்சி நடைமுறை நூல் தொகுதி –I பத்தி எண்.555–ல் இரு வழக்குறைஞர்களை நகராட்சி வழக்குறைஞராக நியமனம் செய்யப்படவேண்டும எனில் நகராட்சி நிர்வாக இயக்குனரக அனுமதி பெறப்படவேண்டும் என நிபந்தனை இருந்ததை தொடர்ந்து தக்க அனுமதி இரு வழக்குறைஞர்களை நகராட்சி வழக்குறைஞர்களாக நியமனம் செய்திடும் பொருட்டு வழஙகிட வேண்டுமாறு 15.10.2009–ல் கருத்துரு அனுப்பப்பட்டதுடன், தொடர் நினைவூட்டுகளும் அனுப்பப்பட்டும் எவ்வித அனுமதி அறிவுரையும் நாளது வரை பெறப்படவில்லை.

இந்நிலையில் புதிய வழக்குறைஞர் நியமனம் செய்ய அனைத்து நகர் மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் தொடர்கோரிக்கை வரப்பெற்றதால் விதிமுறைகளுக்குட்பட்டு புதிய வழக்குறைஞரை தெரிவு செய்திட தக்க அனுமதி வழஙகிடுமாறு நகர் மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் புதிய வழக்குறைஞர் நியமனம் செய்திட நகர் மன்ற தீர்மானம் எண்.3301 நாள்.30.10.2013–ல் தக்க அனுமதி வழஙகப்பட்டதனை தொடர்ந்து புதிய வழக்குரைஞரை நகராட்சி வழக்குறைஞராக தெரிவு செய்திட விண்ணப்பஙகள் வரவேற்கப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விண்ணப்பஙகள் வரப்பற்றுள்ளன.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1. | திரு. N. ஸ்ரீநிவாசன்.17C டதி அம்மாள்.கோர்ட் ரோடு, நாகர்கோவில் |
| 2. | திரு. C.சபாபதி. பூச்சிவளாகம் அஞ்சல்.கன்னியாகுமரி மாவட்டம். |
| 3. | திரு. N. சிதம்பரதாணுபிள்ளை, 10 Low சேம்பர், மாவட்ட நீதிமன்ற வளாகம், கோர்ட் ரோடு, நாகர்கோவில். |
| 4. | திரு. S. நாகராஜன், 782 கௌதம் பவன், கீழக்கோணம், நாகர்கோவில். |
| 5. | திரு. M.S. மூர்த்தி, 27/20 டதி அம்மாள் தெரு, கோர்ட் ரோடு, நாகர்கோவில்–1 |
| 6. | திரு. S.S. ரெஜினிதேவி, 219 கோர்ட் ரோடு, நாகர்கோவில். |
| 7. | திரு. R. ஜெகநாதன், 12c அலெக்சந்திரா பிரஸ் ரோடு, நாகர்கோவில். |
| 8. | திரு. V. செந்தில்குமார், 38 முத்தமிழ் தெரு, நாகர்கோவில். |
| 9. | திருமதி. T.ஷெர்பியா பிந்து 4–162 c புனித அந்தோணியார் தெரு, பண்டாரக்காடு, வில்லுக்குறி அஞ்சல். |
| 10. | திரு. N. நல்லசிவன் பிள்ளை, 17B டதி அம்மாள் தெரு, கோர்ட் ரோடு, நாகர்கோவில் |

மேலும் நகர் மன்ற வழக்குறைஞர் நியமனம் பற்றி நடைமுறை நூல் பத்தி எண்.55–5, 55–6, 55–7–ன் படி ஊரூர் வழக்குறைஞர் சஙகத்தில் அஙகத்தினராக இருக்கவேண்டும். மேலும் 5 ஆண்டுகளுக்கு குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேலும் 58 வயது முடிவடையாமலும் இருக்க வேண்டும. நகராட்சி மன்ற வழக்குறைஞராக நியமன தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் பணியில் இருக்கலாம் என உள்ளது.

மேலும் வரப்பெற்ற விண்ணப்பஙகளை பரிசீலனை செய்ததில் வரிசை எண்.2–ல் கண்ட விண்ணப்பத்தினை தெரிவு செய்திடும் நேர்வில் மூன்றாண்டு காலம் பணிபுரிய தகுதியான வயது இல்லை (55 வருடம் 8 மாதம் பூர்த்தியடைந்துள்ளது) வரிசை எண்.8–ல் கண்டுள்ள விண்ணபத்துடன் உள்ளூர் வழக்குறைஞர் சஙகத்தில் இருந்து கடிதம் பெற்று சமர்பிக்கப்படவில்லை வரிசை எண்.9–ல் கண்டுள்ள விண்ணப்பத்துடன் எவ்வித

ஆவணஙகளும் இணைக்கப்படவில்லை வரிசை எண்.10—ல் கண்ட விண்ணப்பம் உரிய காலத்திற்குள் வரவில்லை. எனவே மேற்படி வழக்குறைகள் விபரத்தில் வரிசை எண். 1,3,4,5,6, மற்றும் 7—ல் இருந்து ஒருவழக்குறைஞரை பரிசீலித்து தெரிவு செய்து முடிவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>— மன்றம் பரிசீலித்து வரிசை எண். 1,3,4,5,6 மற்றும் 7—லிருந்து ஒரு வழக்குறைஞரை மட்டும் நியமனம் செய்திட அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண். 1839/2006/எப்2

**தீர்மான எண் : 1016 — வரிசை எண்.4—ல் கண்ட வழக்குறிஞர் திரு.S. நாகராஜன் 782, கௌதம் பவன் கீழக்கோணம் நாகர்கோவில் என்பவரை நகராட்சி விதிமுறைகளுக்கு உட்பட்டு நகராட்சி வழக்கு அறிஞராக நியமனம் செய்திட தீர்மான விவரத்தின் போது 36—வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.T.R. செல்வம் அவர்களால் முன்மொழிந்து, நகர்மன்ற துணைதலைவர் திரு.R. சைமன்ராஜ் அவர்கள் வழி மொழிந்ததை தொடர்ந்து நகராட்சி வழக்கறிஞர் ஆக நியமனம் செய்திட ஏகமனதாக முடிவு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

38. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 45—ல் பு.எண்.73418, க.எண்.30 A வரிவிதிப்பு எண்.75418 சொத்துவரி கேட்பு பதிவேட்டில் L.கீதா பெயரில் உள்ளது. அரையாண்டு சொத்து வரி ரூ.5292/— L.கீதா என்பவர் செற்றில்மெண்ட் ஆவணம் எண்.573/2007 நாள்.16.02.2007—ம் தன்னுடைய சகோதர்களுக்கு ABC என மூன்று நகல் செய்து அவரவர் பெயரில் தனிதனியாக 01.04.2007 முதல் வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (வரிவிதிப்பு எண்கள் 74670, 74671, 74672) ஆனால் பழைய வரி விதிப்பு எண்.73418—க்குரிய சொத்துவரி 01.04.2007 முதல் ரத்து செய்யப்படாமல் 2013—14 இரண்டாவது அரையாண்டு வரை ரூ.74088/— நிலுவையாக உள்ளது. நிலுவை தொகையினை சம்பந்தப்பட்டவர் மீது வசூல் செய்ய இயலாது. எனவே மேற்படி நிலுவைத்தொகையினை வஜா செய்ய மன்ற அனுமதிவேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>— 2014—15 —ன் அரையாண்டிலிருந்து வரி விதிப்பு எண்.73418 ரத்து செய்யப்பட்டுள்ளதால் 2007—08 I —யில் 2013—14 II ஆண்டு வரையிலான நிலுவை சொத்து வரி ரூ.74088/— வஜா செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 001750/2014/அ9

**தீர்மான எண் : 1017 — அனுமதிக்கப்பட்டது**

39. இந்நகராட்சிக்கு வார்டு எண்.51—ல் சூசை தெரு தளவாய்புரம் திருகுடும்ப கோவில் தெரு, ஆகிய இடஙகளில் புதிய தெருவிளக்குகள் 5 எண்ணம் அமைக்கவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்துடன் ஒப்புதலுக்கு

<u>**அலுவலக குறிப்பு**</u>— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 19885/2014/இ4

**தீர்மான எண் : 1018 — அனுமதிக்கப்பட்டது**

40. இந்நகராட்சி பொது சுகாதார திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தேவையான 5 எண்ணம் Briometric Finger Print Attendance Machine with soft ware வாஙகவும் அதற்காகும் செலவினம் ரூ.1,27,500/—க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>**அலுவலக குறிப்பு**</u>— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 8646/2013/இ3

**தீர்மான எண் : 1019 — அனுமதிக்கப்பட்டது**

41. இந்நகராட்சி சுகாதார பிரிவு பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க செலவீனத்திற்கு நகர் மன்ற தீர்மானம் எண். 426 நாள்.27.06.2014—ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டது. மேலும் மேற்படி பாதுகாப்பு உபகரணங்கள் சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனம் சென்னை (SIDCO) மூலம் வாங்கவும் செலவீனத்திற்கும் நகர் மன்ற தீர்மான எண்.503 நாள்.31.07.2014—ன்படியும் மன்ற அனுமதி பெறப்பட்டது.

SIDCO நிறுவனம், சென்னை கின்வாய்ஸ் படி மொத்தம் ரூ.8,04,405/— ஆகும் எனவே கூடுதலாக உள்ள செலவீனம் ரூ.104405/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>—** அனுமதிக்கலாம். கோப்பு எண். 7329/2006/எச்1

**தீர்மான எண் : 1020 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

42. இந்நகராட்சி வார்டு எண்.2 பரமார்த்தலிங்கபுரம் நியாய விலை கடைக்கு செல்லும் சாலையில் உள்ள மின்கம்பம் எண்.PL II FI 23 போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூறாக உள்ளது. அதனை மாற்றியமைக்கவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>—** அனுமதிக்கலாம். கோப்பு எண். 15193/2014/இ4

**தீர்மான எண் : 1021 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

43. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக வாங்கப்பட்ட வாகனம் எண்.TN 74 AH 7951 —க்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்வதற்கான கட்டணம் காப்பீடு செய்தல் மற்றும் உதிரி பொருட்கள் பொருத்துவதற்கும் ரூ.1,35,000/— க்கு நகர் மன்ற தீர்மானம் எண்.619 நாள்.31.07.2014—ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் பதிவு கட்டணம் மற்றும் காப்பீடு செய்ததற்கு ரூ.90,000/— செலவிடப்பட்டுள்ளது. உதிரி பாகங்கள் பொருத்துவதற்கு ரூ.1,10,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே கூடுதலாகும் செலவினம் ரூ.65,000/—க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>—** 1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 19987/2012/இ1

**தீர்மான எண் : 1022 — <u>அனுமதிக்கப்பட்டது</u>**

44. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி மீன் சந்தையினை இடித்து நவீன முறையில் புதிய மீன் சந்தை கட்டப்பட்டு வருகிறது மேற்படி மீன் சந்தையின் முன்புறம் மீன் சந்தைக்கு இடையூறாக உள்ள கடைகளை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி கடைகளின் குத்தகை தாரர்களின் குத்தகை காலம் 31.03.2015 வரை அன்னார்கள் மேற்படி கடைகளுக்கான வாடகையும் செலுத்தியுள்ளார்கள். எனவே தற்பொழுதுள்ள நிலையில் மேற்படி கடைகளை மாற்றுவது இயலாது. மேலும் மேற்படி கடை குத்தகைதாரர்கள் அவர்களின் மனு நாள்.26.11.2014—ல் தங்களின் சொந்த செலவிலேயே மேற்படி மீன்சந்தைக்கு இடையூறு இல்லாமல் அதன் அருகில் கடைகளை கட்டிக்கொள்வதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மேற்படி மீன்சந்தைக்கு இடையூறு ஏதும் இல்லாமல் கடைகளை அன்னார்களே தங்களது சொந்த செலவில் கட்டிக் கொள்ள அனுமதி வழங்குவது சம்மந்தமாக மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>—** மேற்படி கடை குத்தகைதாரர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

கோப்பு எண். 10215/2014/அ13

**தீர்மான எண் : 1023 – மீன் சந்தை கட்டுமானத்தின் முன்பகுதியில் கடந்த 30 ஆண்டுகளாக இருந்து வரும் 6 கடைகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு இதர கடைகளின் வாடகையில் அதிகமான வாடகைக்கு ஒப்படைக்கவும் தக்க பின்னேற்பு பெறவும் ந.ம.தீ.எண் 606 நாள் 31–07–2014–ல் மன்றம் அனுமதி வழங்கிய நிபந்தனையை மட்டும், மேற்படி கடைகளின் குத்தகை காலம் 31.03.2015 வரை உள்ளதால், மேற்படி கடைகளை சட்டபூர்வமாக மாற்றம் செய்ய இயலாது என்பதால் மேற்படி மீன் சந்தைக்கு இடையூறு இல்லாமல் மீன் சந்தைக்கு அருகில் காலியாக இருக்கும் இடத்தில் நகராட்சி நிர்ணயம் செய்யும் அளவீட்டில் எவ்வித உரிமையும் பின்நாளில் கோரமாட்டோம் என்ற சிறப்பு நிபந்தனையினை உறுதிமொழியாக ஒப்பந்த பத்திரம் சமர்பிக்கும் பட்சத்தில் தமது சொந்த செலவில் கட்டி கொள்ள அனுமதி வழஙகலாம் என தீர்மாணிக்கப்பட்டது.**

45. இந்நகராட்சி வார்டு எண்.49 வள்ளலார் நகர் பகுதியின் 3 எண்ணம் மின் கம்பம் அமைத்து அதில் தெருவிளக்குகள் பொருத்தவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 20497/2014/இ4

**தீர்மான எண் : 1024 – அனுமதிக்கப்பட்டது**

46. இந்நகராட்சி வார்டு எண்.15 வாகையடி தெற்கு ரதவீதியில் ஒரு மின் அளவு மானியில் 60 எண்ணம் மின் விளக்குகள் இயஙகுவதால் இரவு நேரத்தில் மின் பழு அதிகளவில் ஏற்பட்டு மின் இணைப்பு துண்டிப்பு ஆகிவிடுவதால் மேற்படி 60 தெருவிளக்குகள் இருப்பதால் மின்கம்பம் எண். V-II /24 மற்றும் V II 30 ஆகியவற்றில் கூடுதலாக இரண்டு மின் அளவு மானிகள் அமைக்கவும் அதற்காகும் செலவினம் ரூ.14.000/–க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 20509/2014/இ4

**தீர்மான எண் : 1025 – அனுமதிக்கப்பட்டது**

47. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் புளியடி அருகில் ரேசன் கடைஅருகில் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதை சரி செய்ய ரூ.50,000/–க்கு மன்ற தீர்மான எண்.2839, நாள்.18.06.2013 –ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. டெண்டர் கோரப்பட்டு மன்ற தீர்மான எண்.3092 நாள்.02.09.2013–ன் படி திரு. வெற்றிவேலன் ஒப்பந்தக்காரருக்கு வேலை உத்தரவு வழஙகப்பட்டது. தற்சமயம் CBH எதிர்புறமுள்ள தெருவிற்கு செல்லும் சிறுபாலம் உடைந்து போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளதால் மேற்படி இடத்திற்கு பதிலாக CBH எதிர்புறமுள்ள பாலத்தினை மேற்படி மதிப்பீட்டு தொகைக்குள்ளேயே செய்ய திருந்திய மன்ற பொருள் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 136/13–14/இ1

**தீர்மான எண் : 1026 – அனுமதிக்கப்பட்டது**

48. இந்நகராட்சிக்குட்பட்ட வடசேரி பஸ் நிலையத்தினுள் உள்ள கட்டண கழிப்பறை மிகவும் பழுதுபட்டுள்ளதால் புதிதாக நவீன வசதியுடன் கூடிய கழிப்பறை கட்டவேண்டியுள்ளதால் தற்காலிக கழிவறை கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 20509/2014/இ4

**தீர்மான எண் : 1027 – அனுமதிக்கப்பட்டது**